(எட்டாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

**இல. 92.]**

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2016 ஆகஸ்ட் 23, செவ்வாய்க்கிழமை, பி.ப. 1.00 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

493/ ' 16

1.

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2015 ஆம் ஆண்டில் மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களத்தினால் பதிவு செய்யப்பட்டுள்ள, ஏற்றுமதி மற்றும் இறக்குமதித் திணைக்களத்தின் மூலம் விநியோகிக்கப்பட்டுள்ள அனுமதிப்பத்திரத்தின் மீது இறக்குமதி செய்யப்பட்ட கால எல்லையை கடந்துள்ள (overage) வாகனங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) அந்த வாகனங்களை பதிவுசெய்துள்ள ஆட்களின் பெயர்கள், முகவரிகள் மற்றும் பதிவு செய்யப்பட்டுள்ள இலக்கங்கள் என்பவற்றை தனித்தனியாக குறிப்பிடுவாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

514/ '16

2.

கௌரவ புத்திக பத்திரண,— சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் யானைக்கால் நோய் வேகமாக பரவுகின்றதென்பதையும்;

(ii) தற்போது மேற்படி நோய்க்கு கனிசமான அளவினர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பதையும்;

(iii) நோய்த் தடுப்புக்கு அரசாங்கத்தின் பங்களிப்பு போதுமானதல்ல என்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) கடந்த ஐந்தாண்டு காலத்தினுள் இலங்கையில் அறிக்கையிடப்பட்டுள்ள யானைக்கால் நோயாளிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள நோயாளிகளின் எண்ணிக்கை, ஒவ்வொரு மாவட்ட ரீதியாக தனித்தனியாக எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

596/ ’16

3.

கௌரவ லக்கி ஜயவர்தன,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் ஆயிரம் பாடசாலைகளுக்கு தொழில்நுட்ப ஆய்வுகூடங்களை வழங்கும் நிகழச்சித்திட்டத்தின் கீழ் இற்றைவரை திறந்துவைக்கப்பட்டுள்ள தொழில்நுட்ப ஆய்வுகூடங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) இந்த ஆய்வுகூடங்களுக்கு கணனிகளையும் துணைப்பாகங்களையும் கொள்வனவு செய்வதற்கு செலவிடப்பட்டுள்ள மொத்தப் பணத்தொகை எவ்வளவென்பதையும்;

(iii) இந்த கொள்வனவுகள் முறைசார்ந்த பெறுகைகள் நடைமுறையின் கீழ் நடைபெற்றுள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில், அவற்றை அங்கீகரித்தவர்கள் யாவரென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) இந்த கொள்வனவுகளை மேற்கொள்கின்றபோது உரிய தரத்தைக் கொண்டிராத உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதென்பதையும், நிதி முறைகேடுகள் இடம்பெற்றுள்ளதென்பதையும் ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அதற்கு பொறுப்புக் கூறவேண்டியவர்கள் யாவரென்பதையும்;

(iii) இதன் விளைவாக அரசாங்கத்திற்கு ஏற்பட்டுள்ள நட்டம் எவ்வளவென்பதையும்;

(iv) இதற்கு பொறுப்புக் கூறவேண்டியவர்கள் சம்பந்தமாக முறைசார்ந்த விசாரணையை துரிதமாக மேற்கொள்வாரா என்பதையும்;

(v) ஆமெனில், அத்தேதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

612/ ’16

4.

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ,— மாநகர மற்றும் மேல்மாகாண அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) CSN அலைவரிசை இயங்கும் கட்டிடம் அமைந்துள்ள இலக்கம் 236/01, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, பத்தரமுல்ல என்ற முகவரியிலுள்ள காணி,

(i) அரசாங்கத்திற்கு சொந்தமானதாக காணப்பட்டதா;

(ii) குத்தகைக்கு விடப்படப்பட்ட திகதி யாது;

(iii) எத்தரப்பினருக்கு குத்தகைக்கு விட்டப்பட்டுள்ளது;

(iv) குத்தகை காலம் மற்றும் குத்தகைத் தொகை எவ்வளவு;

(v) குத்தகைக்கு விடுவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளதா;

(vi) ஆமெனின், அத்திகதி யாது;

(vii) அந்த குத்தகை உடன்படிக்கையினைச் சமர்ப்பிப்பாரா;

என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி காணியில் தனியார் தொலைக்காட்சி மற்றும் வானொலி அலைவரிசைகளுடன் கூடிய தொழில்முயற்சியொன்றை கொண்டுநடத்துவதற்கு குத்தகை நிபந்தனைகள் மூலம் வசதி செய்யப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) குத்தகை நிபந்தனைகள் மீறப்பட்டிருப்பின், குறித்த தரப்பினருக்கு எதிராக எடுக்கப்படும் சட்டரீதியான நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iii) குத்தகை பெற்ற தரப்பினர் ஒரு மன்றமாக அல்லது அமைப்பாக இருப்பின், அதன் உறுப்பினர்கள் அல்லது பணிப்பாளர் சபையினர் யார் என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

652/ ’16

5.

கௌரவ வாசுதேவ நாணாயக்கார,— நீதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) லங்கா மெரயின் கம்பனியின் (LMSL) சொத்துக்களை முறைகேடான வகையில் விற்பனை செய்தமை சம்பந்தமாக உயர்நீதிமன்றத்தின் SEFR209/2007 வழக்குத் தீர்ப்பின் பிரகாரம், மேற்படி மோசடியான கொடுக்கல் வாங்கல்களுடன் தொடர்புடைய ஆட்களுக்கு எதிராக குற்றவியல் வழக்கு தொடரப்பட வேண்டுமென, வழக்குத் தீர்ப்பில் குறிப்பிடப்பட்டுள்ளதென்பதையும்;

(ii) மேற்படி வழக்குத் தீர்ப்பு வழங்கப்பட்டு 10 ஆண்டுகள் கழிந்துள்ளதெனினும், வழக்குத் தொடர்வதற்கு குற்றப் புலனாய்வுத் திணைக்களம் இற்றைவரை நடவடிக்கை மேற்கொள்ளவில்லையென்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) மேற்படி ஆட்களுக்கு எதிராக குற்றவியல் தொடரப்படுதல் தாமதமாவதற்கான காரணம் யாதென்பதையும்;

(ii) மேற்படி ஆட்களுக்கு எதிராக குற்றவியல் வழக்குத் தொடர்வதை தீவிரப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

654/ ’16

6.

கௌரவ உதய பிரபாத் கம்மன்பில,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2014 திசெம்பர் 31 ஆம் திகதி உள்ளவாறு மற்றும் 2016 மே 31 ஆம் திகதி உள்ளவாறு இலங்கை அரசாங்கத்தின் வெளிநாட்டுப் படுகடன் தொகை ஐக்கிய அமெரிக்க டொலர்களிலும் இலங்கை ரூபாய்களிலும் தனித்தனியாக எவ்வளவென்பதையும்;

(ii) 2014 திசெம்பர் 31 ஆம் திகதி தொடக்கம் 2016 மே 31 ஆம் திகதி வரை அமெரிக்க டொலருக்கு ஒப்பீட்டளவில் இலங்கையின் ரூபாய் வீழ்ச்சியடைந்துள்ள அளவு தனித்தனியாக எவ்வளவென்பதையும்;

(iii) ரூபாயின் செலாவணி வீதம் வீழ்ச்சியடைந்ததன் காரணமாக இலங்கை அரசாங்கத்தின் வெளிநாட்டுப் படுகடன் தொகை உயர்வடைந்துள்ள அளவு ரூபாய்களில் எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

659/ ’16

7.

கௌரவ எம்.எச்.எம்.சல்மான்,— உள்நாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) முஸ்லிம் திருமண மற்றும் மணநீக்கச் சட்டத்தின் கீழ் 4 வது பிரிவின் பிரகாரம் ஆலோசனை சபையொன்று நியமிக்கப்பட்டுள்ளதா;

(ii) ஆமெனில் அச்சபை நியமிக்கப்பட்ட திகதி யாது;

(iii) மேற்படி ஆலோசனை சபை உறுப்பினர்களின் பெயர்கள், அவர்களின் கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகள் தனித்தனியாக யாவை;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், முஸ்லிம் திருமண மற்றும் மணநீக்கச் சட்டத்தின் ஒருசில விடயங்களை அமுலாக்குவதில் தடையேற்பட்டுள்ளதால், மேற்படி ஆலோசனை சபையை தாமதமின்றி நியமிக்க அவர் நடவடிக்கை எடுப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

666/ ’16

8.

கௌரவ பிமல் ரத்நாயக்க,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அரசாங்கத்தினால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளவாறு பிரதம அமைச்சரின் சீன விஜயத்தின் போது இணக்கம் தெரிவிக்கப்பட்டதாக குறிப்பிடப்படும் ‘போட் சிட்டி’ (Port City) கருத்திட்டம் சார்ந்த விசேட சீன கைத்தொழில் வலயம் தொடர்பாக சீன அரசாங்கத்துடன் ஏற்படுத்திக்கொள்ளப்பட்டுள்ள உடன்படிக்கை ஒன்று அல்லது இணக்கப்பாட்டு ஆவணமொன்று உள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அந்த ஆவணத்தை சபையில் சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(iii) மேற்படி விசேட சீன கைத்தொழில் வலயத்தை தாபித்தலுடன் தொடர்புடைய அடிப்படை நிபந்தனைகளையும் முகாமைத்துவம் நடைபெறும் விதத்தையும் பற்றி தெளிவுபடுத்துவாரா என்பதையும்;

(iv) மேற்படி கைத்தொழில் வலயத்திற்காக இனங்காணப்பட்டுள்ள காணியின் வரைபடத்தை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

678/ ’16

9.

கௌரவ ரி. ரன்ஜித் த சொய்ஸா,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அரச பாதுகாப்புச் சேவைக்குரிய இராணுவப்படை, விமானப்படை, கடற்படை, பொலிஸார் மற்றும் சிவில் பாதுகாப்பு படை ஆகியவற்றில் நடவடிக்கைக் கடமையில் ஈடுபட்டிருக்கையில் மருத்துவக் காரணங்களின் கீழ், அங்கவீனமுற்ற படைவீரர்களென ஓய்வு பெறச்செய்யப்பட்ட 55 வயதுக்கு மேற்பட்ட படைவீரர்களான அங்கத்தவர்களின் எண்ணிக்கை யாது;

(ii) இவ்வுத்தியோகத்தர்களுக்கு வழங்கப்படும் கொடுப்பனவுகள் மற்றும் ஒவ்வொரு கொடுப்பனவின் பெறுமதி வெவ்வேறாக யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேலே அ(i) இல் குறிப்பிடப்பட்டுள்ள உத்தியோகத்தர்களுக்கு அங்கவீன படைவீரர்களுக்கு வழங்கப்படும் இயலாமைக்கான ஓய்வூதியம் வழங்கப்படுகின்றதா;

(ii) 55 வயது பூர்த்தியான பின்னர் இயலாமைக்கான ஓய்வூதியத்தை நிறுத்திவிட்டு சாதாரண அரச ஊழியரெனக் கருதி வழங்கப்படும் கொடுப்பனவு எவ்வளவு;

(iii) முழு அங்கவீன நிலையிலுள்ள ஒருவருக்கு மேலே (ii) இன் படி வழங்கப்படும் கொடுப்பனவு நியாயமானதா;

(iv) 55 வயது பூர்த்தியாவதற்கு முன்னர் அங்கவீனமுற்ற படை வீரர் ஒருவர் மரணித்தால், அவரில் தங்கிவாழ்வோருக்கு கொடுப்பனவொன்று வழங்கப்படுகின்றதா;

(v) ஆமெனில், அது பற்றிய முறையியல் யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

731/ ’16

10.

கௌரவ ரோஹித்த அபேகுணவர்தன,— துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2015.01.09 ஆம் திகதியளவில்,

(i) இலங்கை துறைமுக அதிகாரசபையின் மொத்த ஊழியர் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) ஒவ்வொரு துறைமுகத்திற்கும் அமைய நிரந்தர ஊழியர் எண்ணிக்கை, தனித்தனியே யாது என்பதையும்;

(iii) ஒவ்வொரு துறைமுகத்திற்கும் அமைய அமய அடிப்படையிலான ஊழியர் எண்ணிக்கை, தனித்தனியே யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 2016.05.10 ஆம் திகதியளவில் இலங்கை துறைமுக அதிகாரசபையின் மொத்த ஊழியர் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) 2016.05.10 ஆம் திகதியளவில் அதிகாரசபைக்குப் புதிதாக ஆட்சேர்ப்புச் செய்யப்படட ஊழியர் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iii) மேற்படி ஊழியர்கள் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட முறை யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

515/ ’16

11.

கௌரவ புத்திக பத்திரண,— சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் சுற்றுலாத்துறையுடன் சம்பந்தப்பட்ட சில தொழில்களில் ஈடுபடுகின்றவர்களுக்கு மத்தியில் HIV அல்லது வேறு மேக நோய்கள் பரவியுள்ளதென்பதையும்;

(ii) இது சுற்றுலாத்துறையில் நேரடியாகவே தாக்கத்தை ஏற்படுத்துகின்றது என்பதையும்;

அவர் எற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) மேற்படி ஆட்களுக்கு மத்தியில் HIV தொற்றியுள்ளவர்கள் உள்ளனரா என்பதைப் பற்றி மதிப்பீடொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அவ்வெண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) மேலே (அ)(i) இல் குறிப்பிட்டுள்ளவர்களுக்கு மத்தியில் HIV பரவுவதை தடுப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில், அந்த நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

601/ ’16

12.

கௌரவ லக்கீ ஜயவர்தன,— காணி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) காணி நிர்ணயத் திணைக்களத்தினால் உடுநுவர தேர்தல் தொகுதியில் காணி உரிமை பதிவிற்காக ‘பிம் சவிய’ நிகழ்ச்சித் திட்டம் நடைமுறைப்படுத்தப் பட்டுள்ளதென்பதையும்;

(ii) ‘பிம் சவிய’ ஊடாக உடுநுவர தொகுதியில் பதிவு செய்வதற்கு மதிப்பீடு செய்யப்பட்டுள்ள மொத்த காணிகளின் அளவு எவ்வளவு என்பதையும்;

(iii) இற்றை வரை பதிவு செய்யப்பட்டுள்ள காணிகளின் அளவு மற்றும் பதிவு செய்தல் நிறைவு செய்யப்படாத காணிகளின் அளவு தனித்தனியே எவ்வளவென்பதையும்;

(iv) மேற்படி தொகுதியில் காணி உரிமைப் பதிவு நடவடிக்கைகளை விரைவாக நிறைவு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

646/ '16

13.

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ,— தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஊழியர் சேமலாப நிதி ஏதேனும் விமானக் கம்பனியில் முதலீடு செய்யப்பட்டுள்ளதா;

(ii) ஆமெனில், குறித்த விமானக் கம்பனி; முதலீடு செய்யப்பட்ட நிதித் தொகை; மற்றும் முதலீடு செய்யப்பட்ட திகதி யாது;

(iii) இதற்காக இலங்கை மத்திய வங்கியின், நிதிச் சபையின் அங்கிகாரம் கிடைத்துள்ளதா;

(iv) 2015.12.31ஆம் திகதி உள்ளவாறு, குறித்த முதலீட்டின் மூலம் ஊழியர் சேமலாப நிதியத்துக்கு கிடைக்கப்பெற்ற நன்மைகள் யாவை;

(v) எந்தவித நன்மையும் கிடைக்கப்பெறவில்லை எனில், இதற்கான காரணம் யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

668/ ’16

14.

கௌரவ பிமல் ரத்நாயக்க,— பிரதம அமைச்சரும், தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அரசாங்கத்தினால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளவாறு பிரதம அமைச்சரின் சீன விஜயத்தின் போது இணக்கம் தெரிவிக்கப்பட்டதாகக் குறிப்பிடப்படுகின்ற அம்பாந்தோட்டை துறைமுகத்தை அண்டியதான விசேட சீனக் கைத்தொழில் வலயம் தொடர்பாக சீன அரசாங்கத்துடன் ஏற்படுத்திற் கொள்ளப்பட்டுள்ள ஒரு உடன்படிக்கை அல்லது உடன்பாட்டு ஆவணம் உள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அந்த ஆவணத்தை சபையில் சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(iii) மேற்படி சீன கைத்தொழில் வலயத்தினை தாபிப்பதற்கான அடிப்படை நிபந்தனைகள் மற்றும் முகாமைத்துவம் நடைபெறும் விதத்தை தெளிவுபடுத்துவாரா என்பதையும்;

(iv) மேற்படி கைத்தொழில் வலயத்தின் பொருட்டு இனங்காணப்பட்டுள்ள நிலத்தின் வரைபடமொன்றை சர்ப்பிப்பாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

15.

கௌரவ வாசுதேவ நாணாயக்கார,— பொது நிருவாக மற்றும் முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஓய்வு பெறுகின்ற அரசாங்க ஊழியர்களின் ஓய்வூதியத்தைக் கணிப்பிடும் போது ரூபா 10,000/- கொடுப்பனவை சம்பளத்துடன் சேர்த்து கணிப்பிடத் தேவையான ஏற்பாடுகளைச் செய்வதாக அரசாங்கம் கடந்த வரவு செலவுத்திட்டத்தின் போது தெரிவித்துள்ளவாறு அதற்குத் தேவையான நடவடிக்கைகளை தற்போது அமுல்படுத்தாமைக்கான காரணம் யாது என்பதையும்;

(ii) மேற்படி வாக்குறுதி அமுல்படுத்தப்படுவது எத்திகதி முதல் என்பதையும்;

(iii) இது இன்னுமொரு வாக்குறுதி மீறலாக மாறுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## பிரேரணை முன்னறிவித்தல்கள்

1.

கௌரவ எஸ்.சீ. முத்துகுமாரன,— சட்டமூலம் கொண்டுவர அனுமதி (இல.1),— பின்வரும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக :-

“செமட்ட சரண சஹண சேவா மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்”

2.

கௌரவ ஜே.எம். ஆனந்த குமாரசிறி,— சட்டமூலம் கொண்டுவர அனுமதி (இல. 2),— பின்வரும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக :-

“சத்திய ஸ்ரீ கணபதி பக்தி ஜன சேவா மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்”

3.

கௌரவ கே. காதர் மஸ்தான்,— சட்டமூலம் கொண்டுவர அனுமதி (இல. 3),— பின்வரும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக :-

“பேர்ட்டி திஸாநாயக்க மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்”

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* 1.

விலங்குத் தீனி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 2.

நிதி அமைச்சர்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 1),— 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் 3 ஆம் உப பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு 2016 சனவரி 20 ஆம் திகதிய 1950/30 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2016.08.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 3.

நிதி அமைச்சர்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 2),— 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் 3 ஆம் உப பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு 2016 சனவரி 28 ஆம் திகதிய 1951/28 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2016.08.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 4.

நிதி அமைச்சர்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 3),— 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் 3 ஆம் உப பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு 2016 பெப்ரவரி 29 ஆம் திகதிய 1956/10 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2016.08.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 5.

நிதி அமைச்சர்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 4),— 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் 3 ஆம் உப பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு 2016 மார்ச் 08 ஆம் திகதிய 1957/5 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2016.08.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 6.

நிதி அமைச்சர்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 5),— 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் 3 ஆம் உப பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு 2016 ஏப்பிறல் 01 ஆம் திகதிய 1960/59 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2016.08.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 7.

நிதி அமைச்சர்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 6),— 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் 3 ஆம் உப பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு 2016 மே 12 ஆம் திகதிய 1966/26 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2016.08.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 8.

நிதி அமைச்சர்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 7),— 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் 3 ஆம் உப பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு 2016 மே 20 ஆம் திகதிய 1967/57 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2016.08.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 9.

நிதி அமைச்சர்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 8),— 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் 3 ஆம் உப பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு 2016 யூன் 16 ஆம் திகதிய 1971/22 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2016.08.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 10.

நிதி அமைச்சர்,— சுங்கக் கட்டளைச் சட்டத்தின் கீழ் கட்டளை,— சுங்கக் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 235) 10 ஆம் பிரிவின் கீழ் இறக்குமதித் தீர்வைக் கட்டணங்கள் தொடர்பில் 2016 யூன் 16 ஆம் திகதிய 1971/23 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2016.08.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 11.

நிதி அமைச்சர்,— உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை (இல.1),— 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழான உற்பத்தி வரி தொடர்பில் நிதி அமைச்சரினால் விதிக்கப்பட்டு, 2016 ஏப்பிறல் 29 ஆந் திகதிய 1964/70 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2016.08.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 12.

நிதி அமைச்சர்,— உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை (இல.2),— 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 இ பிரிவின் கீழான உற்பத்தி வரி தொடர்பில் நிதி அமைச்சரினால் விதிக்கப்பட்டு, 2016 மே 02 ஆந் திகதிய 1965/2 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2016.08.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 13.

நிதி அமைச்சர்,— உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை (இல.3),— 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 இ பிரிவின் கீழான உற்பத்தி வரி தொடர்பில் நிதி அமைச்சரினால் விதிக்கப்பட்டு, 2016 மே 16 ஆந் திகதிய 1967/5 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2016.08.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 14.

நிதி அமைச்சர்,— உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை (இல.4),— 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழான உற்பத்தி வரி தொடர்பில் நிதி அமைச்சரினால் விதிக்கப்பட்டு, 2016 மே 19 ஆந் திகதிய 1967/52 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2016.08.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 15.

இறப்புக்களின் பதிவு (தற்காலிக ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 16.

ஒதுக்கீடு (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 17.

சட்ட ஆணைக்குழு (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 18.

பிரதேச அபிவிருத்தி அமைச்சர்,— குறைநிரப்புத் தொகை,— செலவீனத் தலைப்பு 147, நிகழ்ச்சித்திட்டம் 01,— † செயற்பாட்டு நடவடிக்கைகள் 2016 ஜனவரி 01 ஆம் திகதியுடன் ஆரம்பித்து 2016 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடையும் நிதி ஆண்டின் பயன்பாட்டுக்காக இலங்கையின் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் ஏற்கனவே அங்கீகரித்துள்ள செலவின எல்லைகளை விஞ்சாத வகையில் அதன் பலதரப்பட்ட செலவீன தலைப்புக்களின் கீழ் எதிர்பார்த்த சேமிப்புக்களை தேசிய வரவுசெலவுத்திட்ட திணைக்களத்தின் செலவீனத் தலைப்பு ''வரவுசெலவுத்திட்ட ஒத்துழைப்பு சேவைகள் மற்றும் அவசர நிலைமைகள் செயற்திட்டத்திற்கு'' மாற்றிக் கொள்வதற்கும் 2015 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க வரவுசெலவுதிட்ட வகுத்திட்டுச் சட்டத்தின் 6.1 மற்றும் 6.2 ஆம் பிரிவுகளினால் வழங்கப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு உட்பட்டு இனங்காணப்பட்ட வெளிநாட்டு நிதியளிப்புடன் செயற்படுகின்ற அபிவிருத்தி செயற்திட்டங்களை துரிதப்படுத்துவதற்கு முன்னுரிமை வழங்கி குறைநிரப்பு நிதி ஏற்பாடாக உரிய அமைச்சுக்களுக்கு மாற்றுவதற்கு இயலும் வகையில் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் திரட்டு நிதியத்திலிருந்து அல்லது அரசுக்குச் சொந்தமான வேறு ஏதேனுமொரு நிதியத்திலிருந்து இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் விருப்பின் பிரகாரம், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்தினால் நிதியளிப்பு செய்யப்பட்ட ரூபா ஐம்பத்தொன்பது கோடி இருபத்தொன்பது இலட்சத்து இருபத்து ஐந்து ஆயிரங்கள் (ரூ. 592,925,000) தொகையினை விஞ்சாத தொகையொன்றை அட்டவணையில் குறிப்பிட்டுள்ள பிரகாரம் ஏற்பாடு செய்து கொள்ள வேண்டுமென பிரதேச அபிவிருத்தி அமைச்சர் பிரேரித்துள்ளார்.

**அட்டவணை**

தலைப்பு:- 147 - பிரதேச அபிவிருத்தி அமைச்சு

நிகழ்ச்சித்திட்டம்:- 1 - செயற்பாட்டு நிகழ்ச்சித்திட்டங்கள்

| | | |
|---|---|---|
| மீண்டெழும் செலவீனம் | - | ரூ. 469,425,000 |
| மூலதனச் செலவீனம் | - | ரூ. 123,500,000 |
| மொத்தச் செலவீனம் | - | ரூ. 592,925,000 |

(ரூபா ஐம்பத்தொன்பது கோடி இருபத்தொன்பது இலட்சத்து இருபத்து ஐந்து ஆயிரங்கள் மாத்திரம்)

**அரச அலுவலர்களுக்கான முற்பண "பீ" கணக்கு**

| | |
|---|---|
| உச்ச செலவீன எல்லை ( உச்ச வரவு எல்லை) | – ரூ 2,000,000 |
| குறைந்த கிடைப்பனவு எல்லை (குறைந்த செலவு எல்லை) | - ரூ. 150,000 |
| உச்ச வரவு நிலுவை எல்லை | - ரூ. 3,500,000 |

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

† 2016 ஆகஸ்ட் மாதம் 09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2016 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க குறைநிரப்பும் மதிப்பீட்டைப் பார்க்க. 1 ஆம் இலக்க குறைநிரப்பு மதிப்பீடுகளின் மொத்தம் ரூபா. 55,000,000

* 19.

குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக் கோவை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 20.

பல்கலைக்கழகங்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 21.

பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சரும்,— இலஞ்சம் மற்றும் ஊழல் பற்றிய குற்றப் புலனாய்வு ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகத்தின் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளை மறுசீரமைத்தல்,— 1994 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க இலஞ்சம் மற்றும் ஊழல் பற்றிய குற்றப் புலனாய்வு ஆணைக்குழுச் சட்டத்தின் 16 (1) ஆவது உறுப்புரையின் பிரகாரம், ஆணைக்குழுவிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கும் அலுவல்களை நிறைவேற்றுவதற்கு அந்த ஆணைக்குழுவுக்கு ஒத்துழைப்பு வழங்குவதற்காக பணிப்பாளர் நாயகம் ஒருவரை நியமிப்பதற்கும், அப்பதவியை வகிப்பவருக்கு பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்படும் சம்பளத்தைச் செலுத்துவதற்கும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாலும்;

ஆபத்தை ஏற்க வேண்டிய பதவியான இலஞ்சம் மற்றும் ஊழல் பற்றிய குற்றப் புலனாய்வு ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் பதவிக்கு 2015.02.12 ஆம் திகதி அரசாங்கத்தின் தேவையின் அடிப்படையில் சட்ட மா அதிபர் திணைக்களத்தில் மேலதிக சொலிஸிட்டர் ஜெனரல் பதவியை வகித்த சனாதிபதி சட்டத்தரணி திருமதி ஏ.ஏ.பீ. தில்ருக்ஷி டயஸ் விக்ரமசிங்கவை நியமனம் செய்ததன் அடிப்படையில், அவருக்கு தனிப்பட்ட வகையில் அமையுமாறு கீழ் குறிப்பிடப்படும் சம்பளம் மற்றும் படிகளை 2015.02.12 ஆம் திகதி முதல் செலுத்துவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளதாலும்;

அ. மேலதிக சொலிஸிட்டர் ஜெனரல் பதவிக்குரித்தான மாதாந்தச் சம்பளம் மற்றும் சகல கொடுப்பனவுகள் (தொலைபேசி கொடுப்பனவு, எரிபொருள் கொடுப்பனவு மற்றும் வீட்டு வாடகைக் கொடுப்பனவு தவிர்ந்த); அத்துடன்

ஆ. இலஞ்சம் அல்லது ஊழல் குற்றப் புலனாய்வு ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகத்திற்குரித்தான அமைச்சின் செயலாளருக்கான கொடுப்பனவு, தொலைபேசிக் கொடுப்பனவு, எரிபொருள் கொடுப்பனவு மற்றும் அரசாங்கத்தினால் உத்தியோகபூர்வ இல்லமொன்று வழங்கப்படவில்லையாயின் வீட்டு வாடகைக் கொடுப்பனவு.

அதற்கமைவாக, 1994 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க இலஞ்சம் மற்றும் ஊழல் பற்றிய குற்றப் புலனாய்வு ஆணைக்குழுச் சட்டத்தின் 16 (2) ஆவது உறுப்புரையின் பிரகாரம், இலஞ்சம் மற்றும் ஊழல் பற்றிய குற்றப் புலனாய்வு ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம், சனாதிபதி சட்டத்தரணி திருமதி ஏ.ஏ.பீ. தில்ருக்ஷி டயஸ் விக்ரமசிங்கவிற்கு அரச திரட்டு நிதியத்திலிருந்து மேற்குறிப்பிடப்பட்ட மாதாந்த சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளைச் செலுத்த வேண்டுமெனும் பிரேரணை இப்பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 22.

போக்குவரத்து மற்றும் சிவில் விமானசேவைகள் அமைச்சர்,— மோட்டார் வாகனச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 2016 யூன் 22 ஆந் திகதிய 1972/33 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப்பத்திரிகை மூலம் சிங்கள மற்றும் தமிழ்மொழி பிரதிகளில் அச்சுப் பிழைகள் திருத்தம் செய்யப்பட்ட, மோட்டார் வாகனச் சட்டத்தின் (203 ஆவது அத்தியாயமான) 122 ஆம் பிரிவு மற்றும் VII அ பகுதியுடன் சேர்த்து வாசிக்கப்படும், குறித்த சட்டத்தின் 237 ஆவது பிரிவின் கீழ் போக்குவரத்து மற்றும் சிவில் விமானச்சேவைகள் அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2015 நவெம்பர் 02 ஆம் திகதிய 1939/4 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப்பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2016.07.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் இணைக்கப்பட்டுள்ளது)

* 23.

பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சரும்,— சுயாதீன ஆணைக்குழுக்களின் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்களுக்குச் செலுத்தப்படும் ஊதியங்கள் மற்றும் ஏனைய படிகள்,— பத்தொன்பதாவது அரசியல் யாப்புத் திருத்தத்தின் ஊடாக திருத்தப்பட்டவாறான இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியல் யாப்பின் 41 (ஆ) உறுப்புரையின் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள ஒன்பது சுயாதீன ஆணைக்குழுக்களின் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்களுக்குச் செலுத்தப்படும் ஊதியங்கள் மற்றும் எனைய கொடுப்பனவுகளை, குறிப்பிட்ட ஆணைக் குழுக்கள் உண்மையிலேயே அலுவல்களை ஆரம்பித்த திகதியினை மேற்குறிப்பிடப்பட்ட செலுத்துகைகள் அமுலாக்கப்படும் திகதியாகக் கருதி செலுத்துவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாலும்:-

(அ) பதவி அதிகாரத்தின் அடிப்படையில் நியமிக்கப்படும் தலைவர்கள் தவிர ஏனைய தலைவர்களுக்கு ரூபா. 100,000/- மாதாந்தக் கொடுப்பனவவையும், ரூபா.10,000/- மாதாந்தத் தொலைபேசிக் கட்டணத்தையும், தனிப்பட்ட பாவனைக்கு உரித்துடைய வகையில் உத்தியோகபூர்வ வாகனமொன்று மற்றும் வாகனத்திற்காக 225 லீட்டர் எரிபொருள் அல்லது சந்தை விலையின் அடிப்படையில் அதற்கு இணையான கொடுப்பனவொன்றைப் பெற்றுக்கொடுப்பதற்காகவும்;

(ஆ) பதவி அதிகாரத்தின் அடிப்படையில் நியமிக்கப்படும் சுயாதீன ஆணைக்குழுத் தலைவர்களுக்கு தமது நிரந்தரப் பதவிக்குரிய சம்பளம் மற்றும் படிகளுக்கு மேலதிகமாக, சுயாதீன ஆணைக்குழுத் தலைவர் ஒருவரின் மாதாந்தக் கொடுப்பனவின் 50% ஐ மாதாந்தக் கொடுப்பனவாகச் செலுத்துவதற்காகவும்;

(இ) இலஞ்சம் அல்லது ஊழல் குற்றப் புலனாய்வு ஆணைக்குழு தவிர ஏனைய சுயாதீன ஆணைக்குழுக்களுக்குப் பதவி அதிகாரத்தின் அடிப்படையில் நியமிக்கப்படாத உறுப்பினர்களுக்கு ரூபா 75,000/- மாதாந்தக் கொடுப்பனவையும், ரூபா 8,000/- மாதாந்தத் தொலைபேசிக் கட்டணத்தையும், தான் வசிக்கும் இடத்திலிருந்து ஆணைக்குழு அலுவலகத்திற்குச் செல்வதற்கான தூரத்தின் அடிப்படையில் 350 கிலோ மீட்டர்கள் வரை ரூபா 25,000/- போக்குவரத்துக் கொடுப்பனவு அல்லது 350 கிலோ மீட்டர்களிலும் அதிகளவு தூரத்திற்கு ரூபா 50,000/- போக்குவரத்துக் கொடுப்பனவையும் செலுத்துவதற்காகவும்;

(ஈ) 2015.06.17 ஆம் திகதிய 3/2015 ஆம் இலக்க அரசாங்க வர்த்தக சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கமைய பதவி அதிகாரத்தின் அடிப்படையில் நியமிக்கப்படும் ஆணைக்குழு உறுப்பினர் ஒருவருக்கு ஒரு கூட்டத்தில் கலந்துகொள்வதற்காக ரூபா 10,000/- கொடுப்பனவைச் செலுத்துவதற்காகவும்;

(உ) 1994 இன் 19 ஆம் இலக்க இலஞ்சம் அல்லது ஊழல் குற்றப் புலனாய்வு ஆணைக்குழுச் சட்டத்தின் (8) ஆம் உறுப்புரைக்கமைய அந்த ஆணைக்குழுவின் தலைவருக்கு இணையான வகையில் உறுப்பினர்களுக்கும் அதிகாரம் ஒப்படைக்கப்பட்டுள்ளதனால் அந்த ஆணைக்குழுவின் உறுப்பினர்களுக்கு ரூபா 95,000/- மாதாந்தக் கொடுப்பனவையும், ரூபா 8,000/- மாதாந்தத் தொலைபேசிக் கட்டணத்தையும், தனிப்பட்ட பாவனைக்கும் உரித்துடைய வகையில் உத்தியோகபூர்வ வாகனமொன்று மற்றும் வாகனத்திற்காக 170 லீட்டர் எரிபொருள் அல்லது சந்தை விலையின் அடிப்படையில் அதற்கு இணையான கொடுப்பனவொன்றைப் பெற்றுக்கொடுப்பதற்காகவும்;

(ஊ) தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மற்றும் உறுப்பினர்களுக்கு தேர்தல் ஒன்றுக்கான அறிவித்தல் விடுக்கப்பட்ட திகதி முதல் பெறுபேறுகள் வெளியிடப்படும் திகதி வரையிலான காலப் பகுதிக்காக அவர்களது மாதாந்தக் கொடுப்பனவின் ¾ விசேட கொடுப்பனவொன்றைப் பெற்றுக்கொடுப்பதற்காகவும்; மற்றும்

அதற்கமைய, அரசியல் யாப்பின் 41 (அ) சட்டத்தின் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள ஒன்பது சுயாதீன ஆணைக்குழுக்களின் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்களுக்கு மேலே குறிப்பிடப்பட்டுள்ள பிரகாரம் ஊதியங்கள் மற்றும் ஏனைய கொடுப்பனவுகளைச் செலுத்தவேண்டுமெனும் பிரேரணை இப்பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் இணைக்கப்பட்டுள்ளது)

* 24.

தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சர்,— கைத்தொழில் பிணக்குகள் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— காலத்திற்குக் காலம் திருத்தப்பட்டவாறாக, 1950 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க கைத்தொழில் பிணக்குகள் சட்டத்தின் (அத்தியாயம் 131) 39 ஆம் பிரிவின் கீழ் தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சரால் ஆக்கப்பட்டதும் 2016.07.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 25.

அரசியலமைப்பின் கீழ் பிரேரணை,— விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2016 யூன் 22),— "இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 104ஆ (5) (அ) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளின் பிரகாரம், தேர்தல் ஆணைக்குழுவினால் 2016 பெப்புருவரி 25 ஆம் திகதிய 1955/19 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும், 2016.05.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான, மக்கள் தீர்ப்பொன்றுக்கான அல்லது தேர்தலொன்றுக்கான காலக்கெடுவின் போது இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்கள் பின்பற்றியொழுக வேண்டிய ஒழுக்கநெறிகள் அல்லது வழிகாட்டு நெறிகள் அங்கீகரிக்கப்படுமாக" எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

* 26.

போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள் அமைச்சர்,— மோட்டார் வாகனச் சட்டத்தின் கீழ் கட்டளைகள்,— (203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் 213 ஈ பிரிவுடன் வாசிக்கப்பட வேண்டிய அச் சட்டத்தின் 237 ஆவது பிரிவின் கீழ் போக்குவரத்து மற்றும் சிவில் விமானசேவைகள் அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2015 திசெம்பர் 22 ஆந் திகதிய 1946/10 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப் பட்டதும் 2016.03.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளைகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 27.

பௌத்த அறநிலையங்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 28.

தேரவாத பிக்குமார்கள் கதிகாவத் (பதிவு செய்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 29.

சேர்பெறுமதி வரி (திருத்தச்) சட்டமூலம்— இரண்டாம் மதிப்பீடு.

* 30.

அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர்,— இறக்குமதி ஏற்றுமதி (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் மற்றும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க சட்டங்களினால் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி ஏற்றுமதி (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் (3) ஆம் உப பிரிவு மற்றும் 14 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ் நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2015 பெப்புருவரி 26 ஆம் திகதிய 1903/41 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2015.09.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றன.